3-JAN 1956

"சர்வோதய மண்டல், மங்கரோட்

Regd. No. M 6207.

கிராமோதயம்

ஆசிரியர்: ப. கோவிந்தசாமி

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 ‡ திருப்பூர் - மார்ச் 1 * 1954 * விலை 1 அணா ‡ இதழ் 9

விவசாய உபகரண சீர்திருத்த ஆராய்ச்சிகள்.

உணவுப் பொருட்கள் உற்பத்தியை அதிகரித்தல் நம் நாட்டிற்கு இன்று மிகவும் தேவைப்படுவதொன்று. ஆனால் இந்த உற்பத்திக்கு அவசியமான விவசாயக் கருவிகளின் நிலையும், விவசாயியின் நிலைமையும் மிகவும் க்ஷீணித்திருக்கின்றது. ஆகையினால் நிர்மாண திட்ட ஸ்தாபனங்கள், நிலப் பிரச்னையுடன் கூடவே விவசாயியின் இதர தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் கவனம் செலுத்த வேண்டும். நமது விவசாயத்திற்கு, நல்ல விதை, உரம், நீர்ப்பாசன வசதி முதலியவைகளுக்கு ஏற்பாடு செய்வதுடன் விவசாயக் கருவிகள் திறமையாகப் பயன்படுபவைகளாக இயங்க, அவைகளில் அடிப்படையான சீர்திருத்தங்கள் செய்யவேண்டியதவசியம். செய்யப்படும் சீர்திருத்தங்கள் எளியனவாக இருக்கவேண்டுமேயல்லாது சாதாரண விவசாயியின் சக்திக்கு மீறியதாக இருக்கக்கூடாது. விவசாயி நகரங்களிலிருந்து தொழிலாளர்களை எதிர்பாராது கிராம ஆசாரிகளைக்கொண்டே இச் சீர்திருத்தங்களைச் செய்துகொள்ள சாத்தியமாய் இருக்கவேண்டும்,

இத்திசையில் சர்க்காரின் சார்பாக நடைபெறும் முயற்சிகளெல்லாம், நமது நாட்டு விவசாயிகளின் நோக்கில் சிந்திக்காது, பிற தேச முறைகளை அமலுக்குக் கொண்டுவர விரும்புபவர்கள் மூலமே நடைபெற்று வருகின்றன அவர்கள் நமது ஏழை விவசாயிகளின் தலையில் டிராக்டர் போன்ற இயந்திரக் கருவிகளைச் சுமத்த விரும்புகின்றனர் இவை மனிதனையும் கால்நடைகளையும் வேலையில்லாது திண்டாட வைப்பது மட்டுமல்ல, ஏழை விவசாயியிடம் இவைகளை வைத்துக்கொள்ளக்கூடிய அளவு பொருளாதார நிலையும் இல்லை. இத்தகைய கருவிகள் இந்திய விவசாயியை கடனில் ஆழ்த்தி தன்னம்பிக்கை இழக்கச் செய்யும்.

இந்தக் கஷ்டங்களிலிருந்து விவசாயிகளைத் தப்புவிப்பது நிர்மாண தொண்டர்களின் கடமையாகும். பிறநாட்டு இயந்திரங்களை நமது விவசாயத்தில் புகுத்தாது ஜீவனுள்ள லட்சக்கணக்கான மனிதர்கள், கால்நடைகள் ஆகியவற்றின் உதவியுடன் விவசாயம் செய்வதில் லாபம் இருக்கிறது. எனவே கிராமத் தொழிலாளர்களால் தயாரிக்கப்படும் நமது புராதனமான கருவிகளை மேலும் நல்ல முறையில் பயன்படும்படி சீர்திருத்துவது பற்றி நாம் சிந்திக்கவேண்டும், இன்றைய சூழ்நிலையில் இம்மாதிரி செய்தால்தான் விவசாயி விவசாயவேலைகளுடன் எஞ்சிய நேரத்தை கிராமத்தொழில்களில் ஈடுபடுத்தி வறுமையினின்றும் தப்பமுடியும்,

இன்றுள்ள நிலையில் நமது புராதன விவசாய முறைதான் நமக்கு அனுகூலமானது. கருவிகளை மட்டும் பரிசீலனை செய்து சீர்திருத்த வேண்டியது அவசியமாகும். ஆகவே பழைய விவசாயக் கருவிகளிலேயே ஆங்காங்கு சிறுசிறு மாறுதல்களைச் செய்து அவைகளை மிக்க பயனுடையதாகச் செய்வதில் நாம் முழு கவனம் செலுத்த வேண்டும். இத்திசையில் அ. பா. சர்வ சேவா சங்கத்தின் சார்பில் முயற்சி செய்யப்படுகிறது என்பதை சமீபத்தில் வர்தாவில் நடைபெற்ற கண்காக்ஷி நிரூபித்திருக்கிறது.

ஸ்ரீ பாலாபிரஸாத் தூத் அவர்களும், ஸ்ரீ கோவிந்த ரெட்டியும் இந்த வேலைகளில் செலுத்தியுள்ள கவனமும், நேரமும் வீணாகப்போகவில்லை. அவர்களால் விவசாயிகளின் பழையகால கருவிகளில் செய்யப்பட்டிருக்கும் சிறிய மாறுதல்கள் காரணமாக உற்பத்தி அதிகரிப்பதில் உதவியுள்ளதோடுகூட, வேலைநேரத்திலும் 25 சதவிகிதம்முதல் 50 சதவிகிதம் வரை மிச்சம் ஏற்படுகிறது என்று அறிய வாசகர்கள் ஆச்சரியமடைவார்கள்.

இந்த கண்காட்சியை திறந்து வைத்து நமது மத்திய சர்க்கார் உணவு மந்திரி ஸ்ரீ ரபிஅஹமத் கித்வாய் பேசியதின் சாரம் சென்ற "கிராமோதயத்தில்" ஏற்கனவே வெளியிடப்பட்டிருக்கிறது. இச்சீர்திருத்தங்களை தேசமெங்குமுள்ள விவசாயிகளும் பயன்படுத்தும்படியாகச் செய்வதற்கு தன்னால் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

—சந்தன் ஸிங்

இயந்திரக் கோட்டைக்குள் கைராட்டைச் சுடர்!

"தனி ஒரு மனிதன் எதை செய்ய முடியுமோ அதை ஒருநாள் சமூகமும் செய்யக்கூடும். ஏனெனில் இந்த விதிக்கு விலக்காயுள்ள தனி மனிதன் எதிர்காலத்தின் அறிகுறியாவான்."

— மகான் அரவிந்தர்

பஞ்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளிடையே சிக்கிக்கொண்டு தொழிலாளர்களுக்கே உரித்தான பலவித பிரச்னைகளில் போராடி வருவதை நாம் பொதுவாகக் கண்டிருக்கிறோம். ஆனால் கோவையை அடுத்த இருகூர் கிராமத்திலிருந்துகொண்டு ஆலைகளில் வேலைசெய்யும் சில தொழிலாள வாலிபர்கள் அவர்களது பிரச்னைகளுக்கிடையில், அங்கு ஒரு கதர் சங்கம் அமைத்து தங்கள் துணித்தேவைக்கு தாங்களே நூற்று, பூரணமாக கதரணிந்து வருகின்றனர் என்ற செய்தி ஏற்கனவே 'கிராமோதயம்' வாயிலாக வாசகர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் சர்வோதய கருத்துக்களில் திடநம்பிக்கை கொண்டு ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் வேலைசெய்து வருகின்றனர். அவர்களது முயற்சியால், கோவையிலுள்ள கீழ்க்கண்ட

(தொடர்ச்சி 39-ம் பக்கத்தில் காண்க)

3-JAN 1956

கிராமோதயம்

மார்ச் 1 1954

சர்வோதய மண்டல் — மங்கரோட்

[மங்கரோட்டின் கதை நம் நாட்டு பண்புக்கும், பிறநாட்டுப் பண்பின் விளைவுகளுக்கும் இடையே தோன்றியுள்ள மோதல்களையே சித்தரிக்கும், இம் மோதல்களை சுருங்கக் கூறினால் பௌதீகவாதத்திற்கும், (Materialism) ஆத்மீகவாதத்திற்கும் (Spiritualism) இடையே தோன்றியுள்ள மோதல்களாகவே கருதப் படவேண்டும்.

அந்த ஊர் ஜமீன்தார் வழிகாட்டி, ஊர் நிலம் அனைத்தும் ஊர்ப் பொதுவாக்கிய மங்கரோட் வாசிகள் பிறகு அந்த நிலத்தை கூட்டுப்பண்ணை முறையில் விவசாயம் செய்வதா? அல்லது தனி நபர்களுக்கே மீண்டும் பங்கீடு செய்துகொடுத்து தனி விவசாயம் செய்வதா? என்ற பிரச்னை எழுந்தது.

நீண்ட நாட்கள் ஆலோசனை செய்தும் வழி பிறக்கவில்லை. ஊரில் ஒரு பகுதியினர் தானம் கொடுத்த நிலத்தையே திரும்பப் பெற்றுக்கொண்டு முன் போலவே விவசாயம் செய்யலாமென்றுகூட சிந்தித்தனர்.

ஆனால் அந்த ஊர் மக்கள் ரஜபுத்திரர்கள். கொடைவள்ளல்கள் சிபி சக்கரவர்த்தியும், ஹரிச்சந்திரனும், கர்ணனும் தோன்றிய வம்சத்தில் கொடுத்த தானத்தைத் திரும்பி வாங்குவதா? என்ற ஆத்மீக உணர்ச்சி ஊர் மாதர்கள் மனதில் அனல் வீசிற்று.

மங்கரோட் பிரச்னைகளைத் தீர்க்க ஒரு வழி வகுப்பது வரை அவ்வூருக்குத் திரும்புவதில்லை என்று ஆணையிட்டு அந்த கிராம வாசிகள் அனைவரும் ஆண், பெண், குழந்தைகள் யாவரும், ஊருக்கு வெளியே சென்று, ஒரு ஆலமரத்தடியில் கூடி யோசித்தார்கள். அங்கு உருவான வேலைத்திட்டப்படியே இன்று மங்கரோட்டில் "சர்வோதய மண்டல்" செயலாற்றி வருகிறது; சென்ற ஒரு வருடத்தில் அங்கு நடந்த வேலைகளை கீழே தருகிறோம்.

இந்த விளைவுகள் ஆத்மீக சக்திகளுக்கு வெற்றியளித்திருக்கிறதா? பௌதிக சக்திகளுக்கு ஊக்கமளித்திருக்கிறதா? என்று வாசகர்களே முடிவு செய்வார்கள்]

— ஆசிரியர்

ஊரிலுள்ள விளைநிலங்கள் ஊர்ப்பொதுவாம் கடமையே என்ற கொள்கையை ஏற்று நிலம் படைத்தோர் அனைவரும் தங்கள் நிலமனைத்தையும் வினோபாவுக்கு தானமாகத் தந்த கிராமம் மங்கரோட். அவைகளை கிராமமக்கள் அனைவரின் நன்மைக்காகவும் பயன்படுத்தி, சர்வோதய கருத்துக்களின் அடிப்படையில் கிராம அமைப்பை ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

1953 மே மாதத்தில் கிராம மக்கள் எல்லோரது சம்மதத்துடனும் 15 மெம்பர்கள் கொண்ட ஒரு கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டு வேலை செய்து வருகிறது. ஊரிலுள்ள நிலமெல்லாம் எந்தத் தனி நபருக்கும் சொந்தமாக இல்லாமல் இந்தக் கமிட்டிக்கே சொந்தமாக்கப்பட்டிருக்கிறது.

கிராம மக்களே தங்களது பிரச்னைகளை ஆராய்ந்து முடிவு செய்வார்கள் அவர்களின் உற்சாகமே வழிகாட்டியாகும், அவர்களே தமது பொறுப்பில் கிராமத்தில் உள்ள சாதனங்களைக் கொண்டே வேலை செய்யலாம் என முதலில் கருதப்பட்டது. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் கிராமத்தில் கிடைக்கக்கூடிய சாதனங்களை மட்டும் நம்பி இருந்தால் கடினமானதாகத் தென்படுவதால், சாதனங்களைப் பொறுத்தவரை வெளியிலிருந்து உதவிபெறலாம் என எல்லை வகுக்கப்பட்டிருக்கிறது.

கிராம நிலை

மங்கரோட் 106 குடும்பங்களைக் கொண்ட கிராமம். 3850 ஏக்கர் நிலம் இந்தக் கமிட்டியிடம் இருக்கிறது. இதில் 800 ஏக்கர் நிலத்தில் விவசாயம் நடைபெற்று வருகிறது. தண்ணீர் நிலை 80 அடி ஆழம். எனவே விவசாயம் மழையை நம்பித்தான் இருக்க வேண்டியிருக்கிறது. தற்போது விளையும் உணவுப்பொருட்கள் 8 மாதங்களுக்குத்தான் போதுமானது. மீதி நான்கு மாதங்களுக்கு வெளியேயிருந்து கொண்டுவர வேண்டியிருக்கிறது, பெரும்பாலும் விவசாயிகள் கடன் வாங்கியே காலத்தைக் கழிக்கிறார்கள்.

கைத்தொழில்கள்

ராட்டைகள் ஓடுகின்றன. இரண்டு தறிகாரர் குடும்பங்கள் இருக்கின்றன. ஊர் ஜனங்களின் முக்கிய தொழில் தோல் தைத்தல். தற்போதைய சூழ்நிலையில் மூலதனமில்லாததால் இத் தொழில் சிதறுண்டிருக்கிறது பிப்ரவரி 12-ந் தேதியிலிருந்து ஆடை சுயதேவைப் பூர்த்தி வேலை துவக்கப்பட்டு வரும் வருடத்தின் முக்கிய வேலைத்திட்டமாக்கப்பட்டிருக்கிறது.

விவசாயம்

சென்ற மே மாதத்தில் இக்கமிட்டி கிராமத்தின் 106 குடும்பங்களில், குடும்பநிலை, வாழ்க்கைத் தேவைகள் ஆகியவற்றை யனுசரித்து 103 குடும்பங்களிடையே நிலத்தைப் பங்கீடுசெய்தது. ஒரு தையல்காரர், ஒரு வளையல்காரர் ஒரு சகோதரி ஆகிய மூன்று குடும்பத்தினர் நிலம் பெற்றுக்கொள்ளவில்லை. 36 குடும்பத்தினர் ஒன்றாகச் சேர்ந்து ஒரு கூட்டுறவு சமூகமாக வேலை செய்கின்றனர். மற்றவர் தனித்தனியாக விவசாயம் செய்கின்றனர்.

உணவைப் பொறுத்தவரை தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள கமிட்டி முயற்சி செய்கிறது. ஜூன் மாதம் மழைபெய்ததும் கல்லும் கரடுமான சுமார் 60 ஏக்கர் நிலத்தை வெட்டி, கொத்தி விவசாயத்திற்கு தகுதியுள்ளதாகச் செய்ய முயற்சிக்கப்பட்டது. ஆனால் அது சமயத்திற்குள் பூரணமாக்க முடியாமல் போய்விட்டது. எனினும் கார் (கரீப்) விதைக்கப்பட்டிருக்கிறது. கார் விளைச்சல் பொதுவாக இவ்வாண்டு நன்றாக இருக்கிறது. (ரபி) மறு போகம் விதைத்தனர். மழையும் சமயத்தில் பெய்து பயிர் நன்றாக இருக்கிறது. இது அறுவடையான பிறகுதான் நாம் உணவு உற்பத்தியில் எந்த அளவு முன்னேறியிருக்கிறோம் என்பது தெரியவரும்.

இக் கிராமத்தினரிடம் கால்நடைச் செல்வம் நன்கு இருக்கிறது. மேய்ச்சலுக்கு வசதியில்லை. சர்வோதய கமிட்டிச்குச் சொந்தமான காடு இருக்கிறது. அதைப் பாதுகாத்து வளர்க்க இவ்வாண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆடுகளும் கிராமத்தில் இருக்கின்றன. இதன் மூலம் கம்பளி வேலை நடைபெற்று வருகிறது. சென்ற 15 வருடங்களாக இத் தொழில் நடைபெறவில்லை. கம்பளி நெய்யத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள், அடுத்த வருடம் இத்தொழிலை செய்யலாம் என முயற்சி செய்யப்படுகிறது.

7-JAN 1956

தோல் தொழில் இக் கிராமத்தின் புராதானத் தொழில். நல்ல கட்டுக்கோப்பான முறையில் இருந்தது. 21 குடும்பங்கள் இவ்வேலை செய்கின்றனர். கால நிலையால் அவர்களது வேலை மிகவும் குறைந்துவிட்டது. சர்வோதயக் கமிட்டி இந்த வேலையில் சிறிது மூலதனத்தைப் போட்டு அபிவிருத்தி செய்ய முயற்சி செய்தது.

இந்த கிராமத்தில் இதுவரை பள்ளிக்கூடம் இல்லை. படிக்காதவர்கள் குறைவாக இருந்த போதிலும் படிப்புக்கு யாதொரு ஏற்பாடும் இல்லை. ஜில்லா போர்டு ஒரு பள்ளி நடத்த அனுமதியளித்திருக்கிறது. ஜூலை மாதத்திலிருந்து நடைபெற்றும் வருகிறது. ஆனாலும் கிராம மக்கள் ஆதாரக் கல்வி பள்ளி நடத்த தீர்மானித்துள்ளனர்.

முதலாவதாக உணவு சுயதேவைப் பூர்த்தி வேலையில் முழுமூச்சுடன் ஈடுபடுதல். இரண்டாவது ஆடை சுயதேவைப் பூர்த்தி. தோல் தொழிலையும் சிறுகச்சிறுக அபிவிருத்தி செய்ய யோசிக்கப்பட்டிருக்கிறது. கம்பளித் தொழிலும் மேற்கொள்ளப்படும். கிராமத்தில் எள் விளைகிறது. எனவே ஒரு செக்கு வைத்து நடத்தவும் விரும்புகின்றனர். இவை தவிர ஒரு ஆதாரக் கல்வி பவனத்திற்கும், பஞ்சாயத்துக்காக ஒரு கட்டிடத்திற்கும் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ், மங்கரோட் சென்றிருந்த போது அஸ்திவாரக்கல் நாட்டினர். அதில் ஆதாரக்கல்வி பவன் தயாராகி விட்டது. இதற்கு சிமெண்டும், ஒரு பெண் கூலியும் தவிர மற்ற எல்லாம் கிராம மக்கள் தங்கள் உழைப்பின் மூலமே செய்தனர். இப்போது பஞ்சாயத்துக் கட்டிடம் கட்டுவதில் ஈடுபட்டிருக்கின்றனர். சிறுவர் சிறுமியர் தாங்களாகவே வேலை செய்கின்றனர். இன்று கிராமம் ஒன்றாகவும் ஒரே அபிப்ராயமுடையதாகவும் இருக்கிறது, எல்லோரது முயற்சியால் கிராமம் செழிக்கட்டும், எல்லோரும் நன்மையடைவார்களாக என்ற நல்ல எண்ணம் அவர்களிடையே காணப்படுகிறது. —அக்ஷயகுமார் கர்ணன்

(37-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மில்களின் தொழிலாளர்களிடமிருந்து நூல் காணிக்கைகள் வசூலாகியுள்ளது.

கஸ்தூரி மில்	1
வசந்தா மில்	1
கதிரி மில்	2
கோத்தாரி மில்	1
கம்போடியா மில்	29
இதர அன்பர்கள்	9
மொத்தம் காணிக்கை வசூல் சிட்டம்	43

இந்த எண்ணிக்கை குறைவானதாயிருப்பினும் பஞ்சுப் பொதிக்குள் சிறு தீப்பொறியையொக்கும். நாட்டிலுள்ள மக்களின் தேவையை இயந்திர மூலம் பெருவாரியாக துணி உற்பத்தி செய்துதான் பூர்த்தி செய்ய முடியும் என்ற கருத்தின் அடிப்படையில் இயங்குவனதான் இன்றைய பஞ்சாலைகள். இதில் சமபங்காளிகள் தொழிலாளிகள். தொழிலாளிகளின் ஒத்துழைப்பு இல்லாவிடில் ஆலைகள் ஓடா. தங்களுடைய தேவையை தாங்களே - எவ்வித வெளியுதவியுமின்றி பூர்த்தி செய்துகொள்ளும் ஆற்றல் படைத்த இத்தொழிலாளர்கள் காந்திய கருத்தைப் புரிந்துகொள்வதில் சிரமம் இராது. மற்ற கிராம மக்களிடம் குவிந்து கிடக்கும் துணி உற்பத்தி சக்தியையும் இவர்கள் உணருவார்கள். இந்த மக்களின் சக்தியையெல்லாம் வீணாக்கி, அவர்களது வாழ்வில் வறுமையைப் புகுத்தும் இந்த பஞ்சாலைகள் தேவைப்படாத நிலை ஏற்படலாம் என்று அவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடும் என்று நம்புவோமாக.

— கே. எஸ். நடராஜன்

சர்வ சேவா சங்கமும், அரசியல் கட்சிகளும்.

[4—2—'54-ந் தேதி காலை அகில பாரத சர்வ சேவா சங்கத்தின் கூட்டத்தில் நடந்த விவாதத்தின் சுருக்கம்] — ஆசிரியர்

சென்ற பல வருஷங்களாகவே, அரசியல் கட்சிபேதங்களுக்கப்பாற்பட்டு, பொதுநல சேவை மூலமே மக்களிடம் அதிக செல்வாக்குப்பெற்று செயல்பட்டு வரும் ஸ்தாபனங்களும், தொண்டர்களும் அரசியல் கட்சிகளுடன் எவ்விதமான தொடர்பு வைத்துக்கொள்வது; அரசியல் கட்சிகளுக்கும், இம்மாதிரி பொதுஜன சேவை செய்து வரும் ஊழியர்களுக்கும், என்ன உறவு நிலவவேண்டும் என்பதுபற்றி யோசனை செய்து வந்திருக்கிறோம். தற்சமயம் இம்மாதிரி கட்சிபேதமின்றி சேவை செய்து வரும் சர்வ சேவா சங்கம் இது விஷயத்தில் வழிகாட்ட வேண்டும் என்று கோரப்படுகிறது.

சர்வோதய பக்ஷம், சர்வோதய மேளா, நூல் காணிக்கை வசூல் பூமிதான யக்ஞம், ஆகிய சகல விதமான பரவலான திட்டங்களும், கட்சிக் கொள்கைகளை புறக்கணித்து,தேசிய வேலைத்திட்டங்களாகவே நடைபெறுகின்றன. இவ்வேலைகளில் எல்லா அரசியல் கட்சி ஊழியர்களும் சமமாக கலந்து கொள்கின்றனர். ஆகையால் சர்வ சேவா சங்கத்தின் அங்கத்தினர்கள் வேறு அரசியல் கட்சிகளில் அங்கத்தினராக இருக்கலாமா? அல்லது வேறு அரசியல் கட்சி அங்கத்தினர்கள் சர்வ சேவா சங்கத்தின் அங்கத்தினர்களாக இருக்கலாமா? என்பதைப் பற்றி முடிவு செய்வது அவசியம்.

இந்தப் பிரச்னையைப் பற்றி ஆராய்வதற்கு முன் சர்வ சேவா சங்கத்தின் வேலைத் திட்டங்களை அஹிம்சை, ஜனசக்தி, ஒத்துழையாமை முதலியவைகளின் அடிப்படை மீது எழுப்புவதா? அல்லது அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி அதன் மூலம் நிறைவேற்றுவதா? ஆகிய பிரச்னைகளைப்பற்றி ஆராய்வது அவசியம்.

சர்வ சேவா சங்கம் அஹிம்சை, சத்தியாக்கிரஹம் ஆகிய இரு சாதனங்களை உபயோகப்படுத்தி தனது லட்சியத்தை நிறைவேற்றும் ஸ்தாபனமாகவே இயங்க வேண்டும். அது வாக்கெடுப்பிலும், அரசியல் அதிகாரப் போட்டிகளிலும் நேரிடையாகக் கலந்து கொள்ளலாகாது. இம்மாதிரி தேர்தல்களிலிருந்து நாம் விலகி நிற்பதின் காரணமாக நமது கொள்கைகள் வாக்காளர்களை வழிகாட்டிச் செல்லாது என்று கூறுவதற்கில்லை; நாம் என்ன சொல்கிறோமோ, செய்கிறோமோ, அதன் எதிரொலி வாக்காளர்களிடையேயும் சென்று அவர்கள் மனோநிலையை மாற்றக்கூடும் ஆனால் நாம் நேரிடையாக தேர்தல்களில் அபேட்சகர்களாக நிற்க இயலாது. இதன் பயனாக நமது தார்மீகபலம் காரணமாக, சர்க்கார் நாம் சொல்வதை ஏற்று நிறைவேற்றக்கூடும். ஆனால் நாம் அமைத்து நிர்வகிக்கும் ஒரு சர்க்கார் ஒருபொழுதும் ஏற்படாது.

இந்த பிரச்னை தெளிவடைந்து விட்டால் சர்வ சேவா சங்கத்தில் இதர அரசியல் கட்சி அங்கத்தினர்களுக்கு இடமிருக்கிறதா? இல்லையா? என்பது சுலபமாகிவிடுகிறது. அரசியல் கட்சிகளில் ஒன்றுகூட இன்று, அஹிம்சையையும் சத்தியாக்கிரஹத்தையும் ஆயுதமாகக்கொண்டு தமது லட்சியங்களை நிறைவேற்றுவதற்கு தயாராக இல்லை. எல்லா கட்சிகளிலும் வாக்கெடுப்பையும், அரசியல்

(தொடர்ச்சி 40-ம் பக்கம் பார்க்க)

சர்வோதய மேளா

தனுஷ்கோடி, இராமேஸ்வரம்

31-1-54-வ முதல் 11-2-54 வ முடிய கால் நடையாக கிராமாந்திரங்களில் யாத்திரை செய்து சர்வோதய வேலைத் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு, அகில பாரத சர்வ சேவா சங்கம், மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களைச் சேர்ந்த சுமார் 100 தொண்டர்கள் 12-2-54வ காலை 7-மணிக்கு தனுஷ் கோடி வந்து சேர்ந்தார்கள். இதே நேரத்தில் மதுரையைச் சேர்ந்த ஸ்ரீ பி. என். கே. சுப்புராம், ஸ்ரீ ஏ. பஞ்சனதய்யர், ஹிந்தி பண்டிட் ஸ்ரீ ஜி. சுப்பிரமணியம், மகாதேவன் போன்ற முக்கியஸ்தர்களும் வன்னிவேலம்பட்டி, இராமநாதபுரம் ஆதாரக்கல்வி பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் அங்கு வந்து சர்வோதய தொண்டர்களுடன் கலந்துகொண்டார்கள்.

இராமேஸ்வரம் வாலிபர் சங்கம், தேசீய மருத்துவ குல சங்கம் ஆகியோர்கள் பெரும் பங்கெடுத்து மேளா வெற்றிபெற உதவி புரிந்துள்ளார்கள்.

இவ்வருடம் சர்வோதய தொண்டர்களை தனுஷ்கோடிக்குச் செல்லும் வழியில் 11ந் தேதி மண்டபத்தில் மகாத்மா கிராமோதய கதர் சங்கத்தைச் சேர்ந்த காரியதரிசி ஸ்ரீ செல்லையாவும் மற்றும்பல கதரன்பர்களும் வரவேற்று, ஊர்வலமாக அழைத்துச் சென்று பொதுக்கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்திருந்ததால் தொண்டர்கள் அன்று இரவு அங்கு தங்கி நூற்பு யக்ஞம், பிரார்த்தனை, பொதுக்கூட்டம் நடத்தினார்கள். பொதுக்கூட்டத்தில் ஹிந்தி பண்டிட் ஸ்ரீ ஜி. சுப்பிரமண்யம் மற்றும் சர்வ சேவா சங்கத் தொண்டர்களும் சர்வோதய கொள்கையை விளக்கி சொற்பொழிவாற்றினார்கள்.

இவ்வருடம் தனுஷ்கோடி, இராமநாதபுரத்தில் மேளா வெற்றிகரமாக நடைபெற உதவி புரிந்த பெருந்தகையாளர்கள் அனைவருக்கும், அகில பாரத சர்வ சேவா சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மதுரை,
15—2—54. அ. சுப்பராயலு.

"சர்வோதய மேளா" ஸ்ரீரங்கம்

காந்திஜி அவர்களின் ஞாபகார்த்தமாக இவ்வருடம் பிப்ரவரி மாதம் 12ம் தேதி ஸ்ரீரங்கத்திலும், திருச்சியிலும் "சர்வோதய மேளா" நடைபெற்றது.

காலை 6-மணிக்கு திருச்சி காதி வஸ்திராலயத்திலிருந்து சர்க்கா சங்க தொண்டர்களுடன், ஹிந்தி வித்யாலய மாணவர்களும், கதரன்பர்களும் கால் நடையாக, தேசிய கீதத்துடன் ஸ்ரீரங்கம் அம்மா மண்டபப் படித்துறைக்குச் சென்றனர். தஞ்சையிலிருந்து சர்க்கார் ஆதாரப்பள்ளி ஆசிரியை மாணவிகளும், லால்குடி ஹரிஜன் ஹாஸ்டல் வார்டன் மாணவர்கள், சர்வ சேவா சங்கத்தின் சர்வோதய பிரசுர ஆசிரியர் ஸ்ரீ என். ராமசாமி, தஞ்சை ஸ்ரீ டி. கே. சீனிவாசய்யர், நெரூர் ஸ்ரீ சிவசுப்பிரமணியம், ஸ்ரீ பி. பொன்னம்பலக் கவுண்டர் முதலியவர்களும், திருச்சி, ஸ்ரீரங்கம் முதலிய ஊர்களின் பிரபலஸ்தர்களும் வந்திருந்தனர், காலை 7 மணிக்கு கடவுள் வணக்கத்துடன் நூற்பு யக்ஞம் நடைபெற்றது, பின்னர் சர்வமதப் பிரார்த்தனை நடைபெற்றது, நூல் காணிக்கைகள் செலுத்தப் பட்டன. பின்னர் சர்வோதயத் தத்துவத்தைப் பற்றி நெரூர் ஸ்ரீ சிவசுப்பிரமணியம் எடுத்துரைத்தார்.

மாலை 5-30 மணிக்கு திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் மௌன நூற்பு யக்ஞம், அதன் பின்னர் சர்வமதப் பிரார்த்தனையும் நடைபெற்றது, மகாத்மாவுக்குப் பிடித்தமான கீதையினின்றும் சில ஸ்லோகங்கள் வாசிக்கப்பட்டு, தமிழர்த்தமும் படிக்கப்பட்டது. தஞ்சை ஆதாரப்பள்ளி மாணவியால் பைபிளில் சில பகுதிகள் தமிழிலும், ஜனுப் இப்ராஹிம் குரானும் ஓதினர்.

பின்னர் சர்வோதய பிரசுராலய ஆசிரியர் ஸ்ரீ என். ராமசாமி அவர்கள், சர்வோதயம் என்பதைப்பற்றியும், பூமிதான இயக்கமும், அதன் அவசியத்தையும் பற்றி சுமார் 45 நிமிஷம் பொதுமக்களுக்கு எடுத்துக் கூறினர். கடைசியாக "ராம் தூன்" கீதத்துடன் சர்வோதய மேளா நிகழ்ச்சிகள் முடிவுற்றது.

—ரா. மருதநாயகம்

சர்வோதய மேளா, பேரூர்.

அண்ணல் காந்தியடிகளின் அஸ்திகரைத்த இடமாகிய பேரூரிலே மேளா கொண்டாடப்படுவது இது 4-வது தடவை. மேளாவுக்கு கோவை தலைவர் டாக்டர் ஸ்ரீ ஸி. நஞ்சப்பா அவர்கள் தலைமை தாங்கினார்கள். காலை 6-30 மணிக்கு கொடி ஏற்றத்துடனும், பிரார்த்தனையுடனும் விழா துவங்கியது. பிரார்த்தனைக்குப் பின்னர் தெரு சுத்தம் செய்யப்பட்டது. 8-மணிக்கு சர்வோதய கண்காட்சியை கோவை தியாகி ஸ்ரீ பி. எஸ். சுந்தரம் அவர்கள் திறந்து வைத்தார்கள். கண்காட்சி ஆரம்பத்திலேயே சர்வோதய பிரசுரங்கள் அழகாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது. அதற்கடுத்து பெரியநாய்க்கன்பாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயப் படங்கள் காந்தியின் வாழ்க்கையையும் ஆதாரக் கல்வியின் பயனையும் எடுத்துக் காட்டியது. பிறகு பருத்தி அரைத்தல், பஞ்சு அடித்தல், நரம்பு செய்தல், துனியிமோடியாவால் பஞ்சு அடித்தல், கதிர் செய்தல், பலவித ராட்டைகளால் நூற்றல், ஈரிழை யாக்குதல், கதிரிலிருந்தே பாவு ஓடுதல், நெய்தல் முதலான வேலைகள் நடந்துகொண்டிருந்தது.

கண்காட்சியில் கதிரிலிருந்து பாவு செய்து தார் சுற்றுமலே நெய்தல் வரை செய்து காட்டியது நெசவின் சரித்திரத்திலேயே ஒரு புதுமை என்றால் மிகையன்று.

கதர் விற்பனைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

வணிகமும் பொருள்நூலும் பிதற்றுவார்
வாழும் நாட்டில் பொருள் கெடல் காண்கிலார்!

என்ற அமரன் பாரதியினடியை அவைகள் ரீங்காரம் செய்து ஐயோ! உங்கள் பக்கத்தே கஞ்சிக்கின்றி வாடும் எண்ணற்ற உங்கள் சகோதரர்கள் தங்கள் வாழ்க்கைக்கு ஆதாரமாகக் கொண்டுள்ள நூற்பு நெசவுத் தொழிலில் பிறந்த கதரை விரும்பாது மில்துணி மோகம் கொள்வதேன் என்று சொல்வது போலிருந்தது!

[தொடர்ச்சி (41-ம் பக்கம் பார்க்க]

(39-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அதிகாரத்தையும், அதன் மூலம் கிடைக்கும் தண்டிக்கும் சக்தியையும் பயன்படுத்தியே அவைகளின் லட்சியத்தை அடைய விரும்புகின்றன. ஆகையால் இவைகளில் அங்கத்தினராயிருப்பவர்கள் சர்வ சேவா சங்கத்தின் அங்கத்தினர்களாக இருப்பது சாத்தியமில்லை என்று கருதப்படவேண்டும்.

— ஒரு நிருபர்

[40-ம் பக்கத் தொடர்ச்சி]

கண்காட்சியின் தொழில் பகுதியில் பெரும்பாலும் நயினுக்கவுண்டன்வலசு பரிசிரமாலய மாணவர்கள் பங்கு கொண்டு தங்கள் வேலைகளைத் திறம்பட செய்து காட்டியது பார்ப்போர் மனதைக் கவர்ந்தது. 10-மணிக்கு அஸ்திகலச ஸ்தூபியருகே நூற்பும் பஜனையும், நூற்றுக்கொண்டே இறைவனைத் தொழவும் செய்யலாம் என்பதை ஞாபகப்படுத்தியது. மாலை நூற்பு யாகம் 1-மணி நேரம் நடந்ததீ. பல ஊழியர்கள் அதில் பங்கு கொண்டனர். 5-30 மணிக்கு பிரார்த்தனையுடன் விழா இனிது முடிந்தது. கண்காட்சி இரவு 8-30 மணி வரையிலும் தொடர்ந்து நடந்தது. நூல் காணிக்கையும் மேளாவில் வசூலாயிற்று.

பேரூர்,
12—2—'54.

எஸ். லட்சுமி.

புவனகிரி சர்வோதய விழா.

11—2—'54-ம் தேதி மாலை 3-30 க்கு கதர் வஸ்திராலயத்திலிருந்தும், கீழ்மூங்கிலடி காந்தி ஆஸ்ரமத்திலிருந்தும் யாத்திரை கோஷ்டி புறப்பட்டு மாலை 6-0 மணிக்கு புவனகிரியை அடைந்தது. இரவு 7-0 க்கு பிரார்த்தனை நடைபெற்றது.

காலை 5-30 மணிக்கு திருப்பள்ளி எழுச்சி
„ 6-0 மணிக்கு பிரார்த்தனை
„ 6-30 க்கு ஸ்ரீ ஆர். விநயகம் பிள்ளை தலைமையில் கொடி வணக்கம் நடைபெற்றது
„ 8-மணி முதல் 10-மணி வரையில், ஊர் வலமும், துப்புரவும், புவனகிரியில் பாசி அடைந்து இருந்த ஓர் குளம் சுத்தம் செய்யப்பட்டது. துப்புரவில் கலந்து கொண்ட நபர் 212.

மாலை 3-மணி முதல் 4-மணி வரை வேள்வி நூற்பு
„ 4-மணி முதல் 7-மணி வரை பொதுக்கூட்டம் ஸ்ரீ ஒ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள் தலைமையில்,

1) ஸ்ரீ ஆர். விநயகம் பிள்ளை அவர்கள், நிர்வாகஸ்தர், காந்தி ஆஸ்ரமப், கீழமூங்கிலடி.
2) ஆத்திப்பாக்கம், ஸ்ரீ ராமகிருஷ்ண ரெட்டியார் அவர்கள், (தென்னார்காடு ஜில்லா பூதான இயக்கக் கமிட்டி கன்வீனர்)
3) ஸ்ரீ வி. ஸி. ராஜகோபால் பிள்ளை அவர்கள், (காங்கிரஸ் தலைவர், புவனகிரி.)
4) ஸ்ரீ எஸ். ஆர். சுப்ரமண்யம் அவர்கள், (பிரஜா-சோஷலிஸ்டுத் தலைவா)
5) ஸ்ரீ சுப்ரமண்யம் அவர்கள், தலைமை ஆசிரியர், காந்தி ஆஸ்ரம ஆதாரக்கல்வி பாடசாலை, மூங்கிலடி.
6) ஸ்ரீ எஸ். ஏ. தேவநாயகய்யா அவர்கள், (காங்கிரஸ் தலைவர், திருப்பாப்புலியூர்.)
7) ஸ்ரீ குப்புசாமி செட்டியார் அவர்கள், தலைவர், சுயதேவை பிரச்சார சபை, புவனகிரி

முதலானவர்கள், கதரின் தத்துவம், சர்வோதயம், பூதான யக்ஞம், ஆதாரக்கல்வி முதலிய விஷயங்கள் பற்றி பேசினார்கள். முடிவில் வஸ்திராலய உதவியாளர் ஸ்ரீ கே. எஸ் கோவிந்தசாமியால் வந்தனோபசாரம் கூறி, கூட்டம் இனிது முடிந்தது.

இரவு 8-30 முதல் 9-30 வரை கீரப்பாளையம் கழக ஆதாரப் பாடசாலை மாணவர்களாலும், சிதம்பரம் முனிசிபல் ஆதாரப் பாடசாலை மாணவிகளாலும்; காந்திய கருத்துக்களடங்கிய கலா நிகழ்ச்சிகள் நடைபெற்றன.
„ 9-30 மணி முதல் 12-30 வரை கீழமூங்கிலடி காந்தி ஆஸ்ரம மாணவர்களால் "காந்தி குடில்" என்னும் நாடகம் நடைபெற்றது.

ஷை கலா நிகழ்ச்சிகளும், நாடகங்களும், புவனகிரி பஞ்சாயத்து போர்டு தலைவர், திரு. மகாலிங்கஞ் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

குறிப்பு:- பொதுக்கூட்டதிற்கும் கலாநிகழ்ச்சிகளுக்கும் 3000க்குமேல் பொதுஜனங்கள் வந்து கலந்துகொண்டார்கள். சர்வோதய மேளா நூல் காணிக்கை 505 சிட்டம் வசூலாகியுள்ளது.
„ சர்வோதய விழா அன்று வேள்வி நூற்பில் நூற்ற நூல் சிட்டம் 33 காணிக்கைக்காக வசூல் செய்யப்பட்டுள்ளது.

சிதம்பரம்,
15—2—54

அ. பாலகிருஷ்ணன்.

எது நாகரீகம்?

நாகரீகம் என்பது இன்றளவில் மக்களை மக்களும் தேசத்தை தேசமும் அடக்கி, அடிமை கொண்டு ஆள ஆசைப்படுவது என்றுள்ளது. இந்த நாகரீகம் வளர்ச்சியடைந்தே வருமானால் உலகம் அழியும் என்பதை நன்கு உணர்ந்து தானோ என்னவோ, இன்றைய நாகரீகத்தின் உறைவிடமாம், அமெரிக்க நாட்டு ஜனாதிபதியார் அணுசக்தி கட்டுப் பாட்டை வற்புறுத்தி பேசி வருகிறார்.

இச்சூழ்நிலையில் நாகரீகம் என்றால் என்ன? அதன் லட்சணம் யாது? என்பதைப் பார்ப்போம்.

நாகரீகம் என்பதை ஆங்கிலத்தில் (Civilization) என்கின்றனர். இச்சொல் நம் தாய்மொழியில் பல்லாயிர ஆண்டுகட்கு முன்பே வழங்கி வந்துள்ளது. ஒரு தேசத்தின் நாகரீக வளர்ச்சியை எதைக்கொண்டு அளவிடுவது? சோப்பும், பவுடரும் இதுபோன்ற வாழ்க்கைக்கு அவசியமற்ற பொருள்கள் அதிகம் உற்பத்தியாவதைக் கொண்டா? அல்லது எல்லா வேலைகளையும் இயந்திரங்களே செய்ய மனிதர்கள் உண்பதும், கேளிக்கைகளில் காலம் கழித்து, போர்வெறி கொண்டு அலைவதைக் கொண்டா? அல்ல. இது அழியும் நாகரீகம். என்றாகிலும் இது அழிவதோடு உலகையும் அழிக்க வகைகோலும்.

ஒரு தேசத்தின் நாகரீக வளர்ச்சியை அத்தேசத்தின் மக்களிடத்தே உள்ள பண்புகளைப் பார்த்தே தேர்வு கொள்ளுதல் வேண்டும். இதற்கு சான்று வேண்டுமெனில் நம் பழம்பெரு நூல்களில் ஆதாரங்கள் உள்ளன. இன்றும், என்றும் மனித வாழ்க்கைக்கு அவசியமும், உலகத்திலுள்ள எல்லா மொழியினராலும் போற்றப்படுவதும், ஐக்கிய நாட்டுச் சபையால் எல்லா பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டதுமான திருக்குறளிலே வள்ளுவப் பெருந்தகையார் நாகரீகம் என்பது என்ன என்பதை தெளிவாக்கியுள்ளார்.

எல்லோராலும் விரும்பத்தக்க நாகரீகம் வேண்டுமென்பவர்கள் சிறந்த நற்பண்புடையவர் தனக்குக் கொடுப்பது விஷம் என்றும் அஃதால் நமக்குத் தீங்கு நேரிடும் என்பதை நன்கு உணர்ந்தும், மறுக்காமல் அதனை உட்கொள்வார்கள் என்னும் பொருள்பட

பெயக்கண்டும் நஞ்சு உண்டு அமைவர் நயத்
தக்க நாகரீகம் வேண்டுபவர் —என்கிறார்.

இதிலிருந்து மனிதனின் குணங்கள் நயமான முறையில் சித்தரிக்கப்படுகிறது.

3-JAN 1956

பின்னும் இதனையே நற்றிணை என்ற பழம் பெரு நூல் ஒன்றிலே புலவர் ஒருவர், தனக்கு முன்னிருந்து மிகவும் நெருங்கிய நட்புள்ளவர் கொடுக்கும் விஷத்தையும் சிறந்த பண்புடையோர் உண்பார்கள் என்னும் பொருள்பட

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்—என்கிறார்.

இனி இவைகளிலிருந்து நாம் அறியக் கிடப்பது, நாகரீகம் என்பது வெளிவேஷமன்று; மனித உள்ளத்தே தழைத்தோங்கும் சிறந்த பண்பாடே என்பது தெளிவு.

இது பக்தை மீராவும், ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளும் விஷம் உண்டதை நினைவுபடுத்தவில்லையா.

ஏன்? நம் காலத்தில் நம்முடன் வாழ்ந்து நமக்கும் உலகுக்கும் பேருண்மைகளை போதித்த காந்தியடிகளார் வாழ்க்கை நமக்கு சிறந்த நாகரீகத்தை எடுத்துக்காட்டவில்லையா? அவருக்கு நாம் செய்யும் ஒரே கைமாறு அவருடைய கொள்கைகள் எங்கும் பரவ வழி செய்வதோடு ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க வேண்டும். அப்போது தான் உலகில் உண்மையான நாகரீகம் வளர்ந்து "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற அமுத வாக்கியங்கள் உயிர்பெறும். அதுவன்றோ நாகரீகம்!

—சா. தே. ராமச்சந்திரன்

தமிழ் நாட்டில்
பொங்கல், சர்வோதய பக்ஷ கதர் விற்பனை

(1—1—'54 முதல் 12—2—'54 முடிய)

1.	திருப்பூர் பிரிவு	ரூ.	2,11,708
2.	தஞ்சாவூர் & திருச்சி	ரூ.	1,21,215
3.	திருநெல்வேலி பிரிவு	ரூ	1,06,463
4.	மதுரை & ராமநாதபுரம்	ரூ.	1,44,318
5.	சென்னை	ரூ.	70,584
	மொத்தம் தமிழ்நாட்டில்	ரூ.	6,54,288

— ப. கோவிந்தசாமி

சர்வோதய மேளா — நூல் காணிக்கை.

காந்தியடிகள் காட்டிய சமூக பொருளாதார கொள்கைகளை ஏற்று அதன்படி நடக்க உறுதிகொண்டோர்களின் தொகுப்பே நூல் காணிக்கை வசூலின் நோக்கம். இந்த வசூல் ஆங்காங்கு நடைபெற்றுள்ளது. பூரா விபரமும் பின்னர் வெளியிடப்படும். இதுவரை குறிப்பாக நமது ராஜ்ய முதன் மந்திரி திரு. ராஜாஜி அவர்களின் சார்பில் காணிக்கை சிட்டம் வரப்பெற்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மற்றும் தமிழ்நாட்டின் பிரமுகர்கள் பலர் காணிக்கை நூல் செலுத்தியுள்ளார்கள். அதன் விபரம் அடுத்த இதழில் தொடரும்.

—ஆசிரியர்

(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)

இந்த இதழில்

விவசாய உபகரண சீர்திருத்த ஆராய்ச்சிகள்	37
சர்வோதய மண்டல் மங்கரோட்	38
சர்வ சேவா சங்கமும்-அரசியல் கட்சிகளும்	39
சர்வோதய மேளா	40
எது நாகரீகம்	41
தமிழ்நாட்டில் பொங்கல் சர்வோதய பக்ஷ கதர் விற்பனை	42

புதுடில்லியில் — கதர் கண்காட்சி

வரும் ஏப்ரல் 3 முதல் 14-ம் தேதிக்கிடையில் புதுடில்லி, ராமலீலா மைதானத்தில், கதர் கிராமக் கைத்தொழில் போர்டின் சார்பில் ஒரு அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் கண்காட்சி நடத்தப்படவிருக்கிறது. அதில் தமிழ் நாட்டுச் சர்க்கா சங்கமும், கிராமோதய கதர் சங்கங்களும் கலந்து கொள்வதற்கும், தமிழ் நாட்டில் நடைபெறும் விசேஷ கதர் வேலைப்பாடுகளையும், கைத்தொழில் திறனையும் விளக்கிக்காட்டுவதற்கும், நமது உற்பத்திக் கதரை விற்பனை செய்வதற்கும் போதிய ஸ்டாக் தயார் செய்து அனுப்பப்பட்டிருக்கிறது மேற்படி கண்காட்சியில் கலந்துகொள்ள விரும்பும் கிராமக் கைத்தொழில் நிபுணர்கள் — "காரியதரிசி, அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் கண்காட்சிக் கமிட்டி, ராமலீலா மைதானம் — புதுடில்லி" — என்ற விலாசத்திற்கு எழுதி விபரம் தெரிந்து கொள்ளலாம்.

— ப. கோவிந்தசாமி

சர்வோதய மேளா — பவனர்

பவனரில் நடைபெறும் மேளாவை பார்வையிட்ட பொழுதுதான் மேளாவின் தோற்றம் எவ்வாறிருக்கும் என்று அறிய முடிந்தது. வேறிடங்களில் மேளாவில் கதான்பர்கள், நிர்மாணத்திட்ட ஊழியர்கள், ஆதாரக்கல்வி ஆசிரிய மாணவர்கள் போன்றவர்களே அதிகமாகக் காணப்படுவது வழக்கம்.

ஆனல் பவனரில் மட்டும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து சுமார் 10 மைல் சுற்றிலுமுள்ள கிராமங்கள் 50 மைலுக்கப்பாலிருந்து நாகபுரி, அகோலா முதலிய இடங்களிலிருந்தும்கூட தேர், திருவிழாக்களைப்போல் ஜாதி, மத வர்க்க பேதமின்றி ஆண், பெண், குழந்தைகள் யாவரும் திரண்டு வந்து கூடியிருந்தனர். சுமார் 5,000 முதல் 10,000 வரை ஜனங்கள் வந்திருந்தனர்.

துறவி ஸ்ரீ துக்கடோஜி அவர்களும், அவரது ஆசிரம வாசிகளும் வழக்கம்போல் வந்திருந்தனர். சேவாகிராம், மகன்வாடி, கோபுரி, கால்வாடி முதலிய நிர்மாணத்திட்ட கேந்திரங்களிலிருந்து ஊழியர்களும், மாணவ, மாணவியர்களும் வந்திருந்தனர். சர்வ மதப் பிரார்த்தனை, கீர்த்தனங்களுக்குப் பிறகு நூல் காணிக்கை வசூல் செய்ததில் சுமார் 1,000 சிட்டம் நூல் சேர்ந்தது.

எல்லோருக்கும் தாம் நதியின் குளுமையான நீரும், அவரவர்கள் கையில் கொண்டுவந்திருந்த ரொட்டி, கிழங்கு, பழம், பொரி, கடலை போன்றவைகளே இடைவேளை ஆகாரம். வரவேற்புக் கமிட்டியும், நிர்வாகமும் எங்கும் இல்லாமல் இந்த ஜனத்திரள் தானே இயங்கி, ஓடி, ஆடி, தேசியத்திருவிழாவைப்போல் மேளாவைக் கொண்டாடி அவரவர்கள் சௌகரியம்போல் மாலைக்குள் வீடு திரும்பினர்.

பூஜ்ய ஸ்ரீ ஜாஜுஜி அவர்கள் மேளாவை முடித்துக்கொண்டு, காந்திஜியின் கொள்கைகளை நமது வாழ்க்கையில் கடைப்பிடிப்பதே காந்திஜியை நாம் கௌரவிப்பதற்கு உற்றவழி என்று கூறினர்.

சேவாகிராமம்,
12—2—'54.

— பெருமாள்

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0-1-0 வருட சந்தா ரூ. 1-8-0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.